26th April 1960]

Sri V. K. KOTHANDARAMAN : வரி கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னால் அதிகாரிகளால் போட்ட வரியைக் கொடுக்காமல் ஏமாற்றுகிறார்களா ? அல்லது அதிகாரிகளால் வரி போட முடியாதபடியே ஏமாற்றுகிறார்களா ? உதாரணமாக பஸ் முதலாளிகள் யார் யார் பேரிலோ வைத்து வரிபோட விடாமல் தப்பித்துக்கொள்கிறார்களே அப்படியா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பஸ்களுக்கு நாம் 'சீட்டுகளின்' பேரில் வரி போட்டு வாங்கி விடுகிறோம். பஸ் யார் பேரில் இருந்தாலும் பரவாயில்லை. பஸ் இல்லை என்று சொல்ல முடியாது. மற்ற விஷயங்களில் எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பது என்னைவிட கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.

Sri A. VEDARATHNAM : மத்திய அரசாங்கத்திற்கு வரி கொடுக்காமல் ஏமாற்றுகிறவர்களாக இருந்தாலும் சுங்கம் முதலியவற்றின் மூலம் அவர்களைப் பிடிப்பது நமது அரசாங்கத்தின் கடமையாக இல்லையா ? பொறுப்பு இல்லையா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது அநேகமாக தியாகி கமிட்டியில் இருந்து வந்தது. இதுபற்றியெல்லாம் கேள்வி நேரத்தின் போது புள்ளி விவரங்கள் கொடுக்க என்னிடம் விவரம் இல்லை.

Sri A. V. P. ASAITHAMBI : வருமான வரியைக் கொடுக்காமல் ஏமாற்றுகிறவர்கள் விஷயத்தில் அரசாங்கமும், அரசாங்கத்தில் இருக்கிற இலாகாவும், அமைச்சர்களும் உடன்பாடாக இருந்திருக்கிறார்கள் என்பதை பிர்லா மாளிகை மர்மங்கள் என்று தனியாக புத்தகமாக திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்களே, அந்த இலாகாவையும், அதிகாரிகளையும், அமைச்சர்களையும் திருத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர்தான் மர்மங்களை எல்லாம் அதிகமாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நான் அந்தப் புத்தகத்தைப் பார்த்ததும் இல்லை, படித்ததும் இல்லை.

Appointment of High Court Judges

* 825 *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Chief Minister be pleased to state whether any decisions have been taken at the Conference of the State Chief Ministers held on the 20th March 1960 at Delhi, regarding the appointment of High Court Judges in the States?

The Hon. Sri C. SUBRAMANIAM: Certain matters relating to the appointment of Judges were discussed and it will not be in the public interest to disclose the details.

Sri N. K. PALANISAMI : ஜட்ஜுகள் நியமிக்கும் விஷயத்தில் மாகாண சர்க்காரின் சிபார்சு பேரில் நியமிக்கப்படுகிறதா ? எந்த அடிப்படையில் சிபார்சு செய்யப்படுகிறது ? இதை மாற்றுவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : மாகாண சர்க்காரின் சிபார்சு பேரில்தான் நடைபெறுகிறது. புதிதாக மாற்ற முடிவு வேண்டியது இல்லை.

Sri K. ANBAZHAGAN : உயர்நீதி மன்ற நீதிபதிகளுடைய நியமனத்திற்கு நம்முடைய சர்க்காரின் சிபார்சுகளை ஒட்டி மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்களா ? நாம் சிபார்சுகளை அனுப்பியிருந்தாலும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதிலே முதல் சிபார்சு செய்யவேண்டியது ஹைக்கோர்ட். அதை மாகாண சர்க்கார் பரிசீலித்து இவர்களுடைய சிபார்சுகளையும் அனுப்பி வைக்கிறார்கள். அங்கே அவர்கள்

[26th April 1960

சுப்ரீம் கோர்ட்டைக் கலந்து ஆலோசிக்கிறார்கள். எல்லோரும் ஒத்துக் கொண்டால் சரி. சில சமயம் ஹைக்கோர்ட் சொல்வதையோ, நாம் சொல்வதையோ ஒத்துக்கொள்கிறார்கள். சில சமயம் சுப்ரீம் கோர்ட் சொல்வதை ஒத்துக்கொள்கிறார்கள்.

Sri K. VINAYAKAM: As our Government have accepted the recommendations of the Law Commission regarding the appointment of Judges, have the Government come to the conclusion that if they accept the principles laid down by the Law Commission, brilliant type of men from our State will be excluded from the panel of names to be submitted to the Government as suggested by the Law Commission?

Mr. SPEAKER: It is quite a different question. If the Hon. Minister is prepared to answer I have no objection.

The Hon. Sri C. SUBRAMANIAM: With regard to the recommendations of the Law Commission, a separate question may be put.

Sri A. A. RASHEED: May I know whether any decision has been taken that High Court Judges should be appointed from different States instead of from the same State?

Mr. SPEAKER: The Hon. Minister has already stated that it is not in the public interest to disclose the details.

The Hon. Sri C. SUBRAMANIAM: I have already stated that the details cannot be disclosed now and I do not think that any amount of cross-examination will be of avail.

Sri N. K. PALANISAMI: முதல் மந்திரிகள் மகாநாட்டில் இப்போது இருக்கிற முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்று ஏதாவது முடிவு செய்யப்பட்டதா?

Mr. SPEAKER: முன்னாலேயேதான் "பதில் சொல்ல முடியாது" என்று சொன்னார்களே, அடுத்த கேள்வி 826.

Integration of services of transferred personnel in the Education Department

* 826 Q.—Sri T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the integration of services of the transferred personnel in the Education Department is over and if so, the particulars thereof (including a copy of the Government Order);

(b) whether any Government Order was passed to keep up the ratio of 2:7 between the I-Grade teachers and II-Grade teachers in the Kanyakumari district as was followed before the date of Reorganization;

(c) whether this Government Order was implemented; and

(d) if not why?

The Hon. Sri C. SUBRAMANIAM: (a) The orders of integration have been passed only in the case of allottees to be absorbed in the State-wide categories in the Education Department. Integration in respect of posts which are borne on district-wide basis is under consideration. Two copies of the Government Order issued are placed in the Legislature Library.